விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்– 12.46 p.m
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் – 01.04 p.m
மீண்டும் விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்– 03.45 p.m
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் – 04.00 p.m

## DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, METTUR

Case No :C.C.No.180/2019

Prosecution side witness : அ.சா.2 Date : 17.02.2025

| | |
|---|---|
| Name : குப்புசாமி | Taluk : ஓமலூர் |
| Father Name : ராஜப்பன் | Calling : வனச்சரக அலுவலர் |
| Village : தாசமங்கலம் | Age : 59 |

(Accused present.)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது சேலம் வனகோட்டத்தில் சந்தன மர விற்பனை கிடங்கில் வனசரக அலுவலராக பணியாற்றி வருகிறேன். 2011 – 2012 ம் தேதி உள்ளூர்தண்டா தெற்கு பிரிவில் வனவராக இருந்தேன். 11.11.2012 ம் தேதி இரவு 08.00 மணியளவில் என்னுடைய தலைமையில் குரும்பனூர் வடக்கு பீட் வனக்காப்பாளர் நல்லசிவம், குரும்பனூர் வடக்கு பீட் வனக்காவாலர் ராதா, சிறப்பு இலக்குபடை சார்பு ஆய்வாளர் செல்வசுரேஷ் பிரிட்டோ மற்றும் PC 1286 ரவிசந்திரன், PC 1756 வேல்முருகன் சிறப்பு இலக்கு படையை சேர்ந்தவர்கள் ஆகியோர்கள் தனிகுழுவாக குரும்பனூர் வடக்கு பீட் பகுதியை ஒட்டியுள்ள காப்புக்காடு, சின்னகாவல் மாரியம்மன் கோயில் பகுதி மறைந்து இருந்து ரோந்து பகுதி மேற்கொண்ட போது அடையாளம் தெரியாத ஒரு நபர் கையில் எதோ ஒரு பொருளை எடுத்துவந்தார். அவரை சுற்றி வளைத்து பிடித்த விசாரிக்கும்போது சேலம் மாவட்டம், கோவிந்தப்பாடி அஞ்சல், ஊஞ்சக்கொறை சேர்ந்த சுந்தராஜ் (எ) வெள்ளையன் என்று கூறினார்.

2) எதிரி கையில் வைத்திருந்த பொருள் குரும்பனூர் வடக்கு பீட் பகுதியை ஒட்டியுள்ள காப்பு காட்டில் இருந்து காவேரி நீர் தேக்க பகுதியான மூல்கடைக்கு வந்த உடும்பு ஒன்றினை எதிரி அழைத்து வந்த நாயை பயன்படுத்தி வேட்டையாடு நோக்கத்துடன் ஏவிவிட்டதில் நாய் உடும்பினை விரட்டி சென்று கடித்துவிட்டதாகவும் அதனால் அந்த உடும்பு இறந்துவிட்டது என்று சொன்னார். இறந்துவிட்ட உடும்பினை அதன் வாலை வளைத்து தலையுடன் சேர்த்து கட்டி கையில் எடுத்துவந்ததாகவும் எதிரி ஒப்புக்கொண்டார்.

3) எதிரி அரசு காப்பு காட்டிற்குள் அத்துமீறி உள்ளே நுழைந்து வேட்டை நாயை ஏவிவிட்டு வன உயிரினமான உடும்பினை வேட்டையாடியது தமிழ்நாடு வனச்சட்டம், தமிழ்நாடு வனஉயிரின பாதுகாப்புசட்டம் 1972 ன் படி தண்டைக்குரிய குற்றமாகும் அதனால் எதிரியை தமிழ்நாடு வனஉயிரின பாதுகாப்புசட்டம் பிரிவு 50 ன் படி இரவு 08.30 மணியளவில் எதிரியை கைது செய்தேன். சிறப்பு இலக்கு படையை சேர்ந்த சார்பு ஆய்வாளர் செல்வ சுரேஷ் பிரிட்டோ அவர்களால் மகஜர் தயார் செய்யப்பட்டது. இறந்து போன உடும்பு, அரிவாள் – 1, எதிரி வைத்திருந்த செல்போன் – 1 ஆகியவற்றை இரவு 10.00 மணியளவில் மேட்டூர் வனசரக அலுவலர் அவர்களிடம் மேட்டூர் வனச்சரக அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது.

4) 12.11.2012 ம் தேதி மேட்டூர் வன சரக அலுவலகத்தில் மேட்டூர் வனசரகர் பழனிசாமி அவர்களின் முன்னிலையில் எதிரியிடம் விசாரணை மேற்கொண்டபோது எதிரி யாருடைய தூண்டுதல் இன்றி வற்புறுதலும் இன்றி காலை 09.00 மணியளவில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்.

**(ஒப்புதல் வாக்குமூலம் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்பு என்னால் இந்த வழக்கின் ெஹறச் நமுனா தயார் செய்யப்பட்டது. ( **ெஹறச் நமுனா அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பிடிப்பட்ட பொருட்களை படிவம் 95 மூலம் வனக்காபாளர் அவர்கள் தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். எதிரி வேட்டையாடிய உடும்பானது செடியூல் 2, பார்ட் 2 வரிசை 15 வரும் அரிய வகை இனம் ஆகும். எனவே எதிரி செய்த இந்த குற்றமானது 1882 வருட தமிழ்நாடு வனச்சட்டம் 5 வது Act பிரிவு 21 உட்பிரிவு (d)(h) படியும் 1972 வருட வன உயிரின பாதுகாப்புச் சட்டம் பிரிவு 2(16–a&b), 9(1), 39(1)(2), 40(2), 50 மற்றும் 51 ன் படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

5) பிடிப்பட்ட எதிரியும் பிடிப்பொருட்களையும் 12.11.2012 ம் தேதி நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு முன் ஆஜர்படுத்தப்பட்டு ஓமலூர் கிளைச்சிறையில் எதிரியை அடைத்தோம். இறந்துபோன உடும்பினை நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களின் உத்தரவுப்படி பிரே பரிசோதனை செய்து புதைக்கப்பட்டது. இறந்து போன உடும்பினை காவேரி கிராஷ் கால்நடை மருத்துவர் அவர்கள் பிரேத பரிசோதனை மேற்கொண்டு பிரேதத்தை ஒப்படைத்தன் பேரில் மேட்டுர் வன சரக அலுவலகத்தில் முறைப்படி புதைத்தோம். அதன் பிறகு புலன் விசாரணை முடித்து வனசரகர் அ படிவத்தை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – செய்யப்படவில்லை.**

**விசாரணை முடிக்கப்பட்டது.**

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டுர்.**